# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2023 யூலை

## (202) டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள்

இவ்வினாத்தாள் புதிய தொழினுட்ப அபிவிருத்திகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் போக்குகள் ஆகியவற்றில் மேலதிக கவனத்தைச் செலுத்தி, தகவல் தொழினுட்பவியலின் ஒட்டுமொத்த பகுதிகளையும் பரீட்சித்திருந்தது. இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு தகவல் முறைமைகளைப் பாதிக்கின்ற ஒழுக்கநெறி, சமூக, மற்றும் சட்டச் சூழல்கள் பற்றிய முற்றடக்கமான புரிதல் தேவை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்வினாத்தாள் A, B, C என மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது. மேலும், அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது கட்டாயமானதாகும்.

## பகுதி A

### வினா இல. 01

இந்தப் பகுதியில் முழுமையான பாடத்திட்டமும் நுட்பமாகப் பரீட்சிக்கப்பட்டிருந்தது. ஒரு கையளவு எண்ணிக்கையிலானவர்களைத் தவிர ஏனைய சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சராசரிப் புள்ளிகளுக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வழங்கப்பட்ட விடைகள் சாதகமான மட்டத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், இரண்டாம் பகுதியிலிருந்த 05 வினாக்களுக்கும் (1.11 – 1.15) அளிக்கப் பட்டிருந்த விடைகள் முற்பகுதியில் இருந்த வினாக்களுக்கு (1.1 – 1.10) அளிக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிடுகையில் வெற்றிகரமானதாக அமையவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

மேலும், குறிப்பாக பாடத்திட்டத்தில் காணப்பட்ட எந்தவொரு பகுதிக்கும் மோசமான விடைகள் அளிக்கப்பட்டதைக் காணமுடியவில்லை.

**பகுதி A** இற்கு 25% ஆன புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்ததால் இப்பகுதிக்கு விடையளிக்காமல் விடுவது முழு வினாத்தாளிலும் குறைந்தளவான புள்ளிகளையே பெற வழிவகுக்கும். எனவே, இந்தப் பகுதிக்கு சரியான விடைகளை எழுதும் பொருட்டு பாடத்திட்டத்தை முழுமையாக படித்தல் வேண்டும்.

## பகுதி B

### வினா இல. 02

இந்த வினா மூன்று பிரதான பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இதில் பகுதி (a) ஆனது நிறுவன வெற்றிக்கு அவசியமான தகவல் முறைமைகளில் பயன்படுத்தப்படும் தரமான தகவல்களின் 02 பண்புகளைக் கேட்டிருந்தது. பகுதி (b) ஆனது சந்தையில் புதிய அபிவிருத்திகளுக்கு ஒரு நிறுவனத்தின் பொறுப்புணர்வை அதிகரிப்பதற்கு தகவல் முறைமைகள் மற்றும் தகவல் தொழினுட்பம் ஆகியன உதவுகின்ற இரண்டு (02) வழிமுறைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பகுதி (c) ஆனது தரப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனியாள் தகவல் முகாமைத்துவத்திற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருத்தமான மென்பொருள் செயலியை இனங்காணுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. பகுதிகள் (a) மற்றும் (b) இற்கு ஓரளவுக்கு வெற்றிகரமான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், பகுதி (c) இற்கான பிரதிபலிப்பு மட்டம் மோசமானதாக இருந்தது. தனியாள் முகாமைத்துவதற்திற்காகப் பயன்படுத்தப்படும் தகவல் தொழினுட்பச் செயலிகளிலுள்ள குறைவான அறிவினையே இது காட்டுகிறது. நாளாந்த வாழ்வில் பயன்படுத்தப்படும் தகவல் தொழினுட்பச் செயலிகள் பற்றிய பொது அறிவு, வெற்றிகரமான புள்ளிகளைப் பெற பரீட்சார்த்திகளுக்கு உதவலாம்.

### வினா இல. 03

இந்த வினாவின் நோக்கம் (a) உற்பத்தித்திறனை மேம்படுத்துகின்ற மென்பொருள் செயலிகளை உதாரணங்களுடன் நிரற்படுத்துவதும், (b) நிறுவனமொன்று தனது தரவு முகாமைத்துவச் செயன்முறையை நெறிப்படுத்துவதற்காக ஒரு பொருத்தமான தரவுத்தளத்தைத் தெரிவு செய்வதற்கு முன்னர் அந்நிறுவனம் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு காரணிகளை விபரிப்பதையும் DBMS இன் பிரதிகூலங்களைக் குறிப்பிடுவதையும் பரீட்சிப்பதாகும்.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சிறந்த புள்ளி களையும் பெற்றிருந்தனர். வினா (b) இன் பகுதி (i) இற்கு அளிக்கப்பட்ட விடைகள் விடயம் பற்றிய குறைவான புரிதலே காணப்படுவதை நிரூபித்திருந்தன. அத்துடன் பகுதி (ii) இற்கு பல பொதுவான விடைகளை அவதானிக்க முடிந்தது. இது தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள் பற்றிய அறிவு குறைவாக இருப்பதையே காட்டுகிறது.

### வினா இல. 04

இவ்வினா உத்திசார் திட்டமிடல், தந்திரோபாயத் திட்டமிடல், முகாமைத்துவ மட்டங்கள் மற்றும் ERP முறைமைகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் உயர்ந்தளவான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பகுதி (c) இற்கு அளிக்கப்பட்ட விடைகள் பொதுவான பிரதிபலிப்பைக் கொண்டிருந்தன. எனவே இந்தப் பகுதி பற்றிய அறிவு பரந்தளவில் இருந்தது என முடிவுக்கு வரலாம்.

### வினா இல. 05

இந்த வினா முகில் கணினியியல், சமூக ஊடகங்கள் மற்றும் கணினிக் குற்றங்களுக்கு எதிரான பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படக்கூடிய சட்ட ஏற்பாடுகள் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்து, உயர் புள்ளிகளைப் பெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது.

சமூக ஊடகம் பற்றி குறைந்தளவு அறிவைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகள் சொற்ப அளவிலேயே காணப்பட்டனர்.

பகுதி (b) ஐப் பொறுத்தளவில், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சட்ட ஏற்பாடுகளை விபரித்திருந்தனர். இது கணினிக் குற்றங்களுக்கு எதிரான சட்ட வேலைச்சட்டகம் தொடர்பில் மாணவர்கள் குறைவான அறிவைக் கொண்டிருப்பதையே காட்டுகிறது.

பகுதி (c) ஆனது பொதுவான விடைகளை உள்ளடக்கியிருந்தது. இது முகில் கணினியியல் பற்றி மாணவர்களிடம் போதிய அறிவு இல்லை என்பதைக் காட்டுகிறது.

## வினா இல. 06

இவ்வினா கூட்ட நிதியிடல் மற்றும் ரோபோக்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அவர்களில் பலர் உயர்ந்தளவான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பகுதி (a) இற்கு அளிக்கப்பட்ட விடைகள் வெற்றிகரமானதாக அமையவில்லை. இது பரீட்சார்த்திகளிடையே கூட்ட நிதியிடல் பற்றி போதிய அறிவு காணப்படவில்லை என்பதை உணர்த்துகிறது. பகுதி (b) இற்கான விடைகள் மிகவும் வெற்றிகரமானதாக அமைந்திருந்தன.

## வினா இல. 07

இவ்வினாவானது நிகழ்கால உலக நிகழ்வுகள் / சம்பவங்களுடன் தொடர்புடைய கோட்பாடுகள் / எண்ணக்கருக்களை தொடர்புபடுத்துவதன் மூலம் பரீட்சார்த்திகளை விடையளிக்குமாறு கேட்கப்பட்ட ஒரு விடய ஆய்வு வினாவாகும். அதற்கிணங்க, இவ்வினா உள்நாட்டு உணவகச் சங்கிலியொன்றை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட முகாமைத்துவ மட்டங்கள், கையடக்கத் தொலைபேசி ஊடான கொடுப்பனவுகள், தரவு காட்சிப்படுத்தல், இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் நிகழ் நேர தகவல் முறைமைகளினதும் CRM முறைமைகளினதும் பல்வேறு தாக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான தகவல் முறைமைகளைப் பரீட்சித்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் குறிப்பிடத்தக்க அளவான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகள் பகுதிகள் (a), (b), (c) ஆகியவற்றுக்கு மிதமான விடைகளை அளித்திருந்தனர். இருப்பினும், பகுதி (d) இற்கு அளிக்கப்பட்ட விடைகள் பரீட்சார்த்திகள் தரவு காட்சிப்படுத்தல் பற்றிய எண்ணக்கரு தொடர்பில் புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியது. பகுதி (e) இற்கான விடையைக் கருதுவோமானால், பல பரீட்சார்த்திகள் விடையளித்திருந்த போதிலும் அவற்றில் பெரும்பாலான விடைகள் பொதுவான விடையாக அமைந்திருந்தது.

- - -

**<u>செயல்திறனை மேம்படுத்துவதற்கான குறிப்புகள்:</u>**

**(1)** முழுமையான பாடத்தையும் முற்றிலும் படித்தல்.

**(2)** வினாவினை தெளிவாக வாசிப்பதுடன் நேரடி விடை எதிர்பார்க்கும் வினாவிற்கு தேவையற்ற விளக்கங்கள் கொடுப்பதை தவிர்த்தல்.

**(3)** விசேடமாக பாடப்புத்தகம், நூல்கள், கையேடுகள், புத்தகங்கள், மத்தியவங்கி ஆண்டறிக்கை மற்றும் பாடத்துடன் தொடர்படைய ஏனையவற்றையும் படித்தல்.

**(4)** விடையெழுதும் போது தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்புடைய தத்துவார்த்த கருத்துக்கள் மற்றும் நடைமுறை அறிவினை ஒழுங்கமைந்த முறையில் முன்வைப்பதோடு தேவைப்படும் இடங்களில் உதாரணங்களை குறிப்பிடுதல் அவசியமாகும்.

**(5)** கையெழுத்து வாசிக்ககூடிய வகையில் இருப்பதோடு வினா இலக்கங்களை சரியான முறையில் தெளிவாக எழுதியிருப்பதை உறுதி செய்தல்.

**(6)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(7)** வினாத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை பின்பற்றல்.

**(8)** வினைத்திறனான நோ முகாமைத்துவத்தை பிரயோகித்தல்.

**(9)** விடைத்தளை கையளிக்கும் முன்னர் வினா இலக்கங்களை மீள சரிபார்த்தல்.

**(10)** நம்பிக்கையுடன் பரீட்சையில் அமர்தல் மற்றும் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான அதிகபட்ச எதிர்பார்ப்பைக் கொண்டிருத்தல்.

- * * * -